# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## பாடல் மனனப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. பாடல் மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)
   போட்டிக்குக் கொடுக்கப்படும் பாடல்களை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலர் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், கீழ்ப்பிரிவு ஒவ்வொரு போட்டியாளருக்கு 5 நிமிடங்கள் வழங்கப்படும்.

2. பாடல் மனனப் போட்டி - (மத்திய பிரிவு)
   இப்போட்டிக்கு 10 திருக்குறள்கள் பொருளுடன் கொடுக்கப்படும். அவற்றை மனனஞ் செய்து பொருளுடன் கூறல் வேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.

3. போட்டிகளுக்கெனச் சிறுவர்களுக்கான பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டியின் போது உச்சரிப்பு(30), பொருளுணர்ந்து கூறுதல் (25), சபை மரபும் ஆதிக்கமும் (30) மனனஞ் செய்யும் திறமை (15), ஆகியன கவனிக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும்.

4. **உச்சரிப்புத் திறன்** (30 %)
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது ஒப்புவித்தல்
     (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
   - குழந்தைகளின் மழலைத் தமிழுக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

5. **பொருள் உணர்ந்து ஒப்புவிக்கும் திறன்** (25%),
   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திப் பாடலை ஒப்புவித்தல்
   - வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
   - அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பாடலை ஆரம்பித்தல்.
   - பாடலை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும்,செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
   - சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, சுவரை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
   - முகத்தில் புன்னகை: பாடலின் பொருளை அனுபவித்து, ரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.
   - முக்கியமாக பாடலுக்கு இராகம், தாளம், சேர்த்து ஒப்புவிக்குமிடத்து எந்தவித மேலதிக புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது, மாறாகப் பாடலை முறையாக ஒப்புவிக்காதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: Email: tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org
Tele: 0433 088 725 or 02-9758 7970

7) மனனஞ் செய்யும் திறன் (15%)
- சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் ஒப்புவித்தல். (பாடல் வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்.)
- சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுவதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)
- எழுத்துப் பிரதியையோ துணைக்குறிப்பைப் பார்த்துப் பாடலை ஒப்புவிக்கமுடியாது. புள்ளிகள் குறைக்கப்படும்.
- பாடல் வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்கள் சார்ந்த பார்வையாளர்கள்(பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

8. போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:
- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், போட்டிகளின் நேர அட்டவணையையும் ஏற்கனவே உங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். உங்கள் விண்ணப்பம் முழுமை பெறாவிட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும். நீங்கள் எங்களுடன் 10/07/06ற்கு முன்னர் தொடர்பு கொள்ளாதபட்சத்தில், நீங்கள் போட்டியில் தோற்றும் தகுதியை இழக்கின்றீர்கள்.
- போட்டிகளுக்கான பாடலை இன்னமும் பெற்றுக் கொள்ளாதவர்கள்,
    - உங்கள் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது
    - எமது இணையத்தளத்திலோ அவற்றைப் பெறலாம், அல்லது
    - எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- எமது கடிதம் கிடைக்காவிட்டால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை($5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தை ஏற்கனவே தராவிடின், தயவு செய்து அனுப்பி விடவும்.

9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்